விலை சதம் 50 ★ பக்கங்கள் — 8

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார ரோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம்செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1979-5-21
PERIODICALS DIVISION
LIBRARY

மில்க்வைற்
தொழிலகம்
வர்த்தகப் பெருமக்களுக்கு
ஒரு பணிவான
வேண்டுகோள்
தயவுசெய்து
எங்கள் தயாரிப்புக்களை
உரிய மேலுறைகளோடு
விற்பனைசெய்து
ஆதரவு நல்குங்கள்.
·தொழிலதிபர்

மலர் 21 வைகாசி 6 ஜ. அகிர் 22 ஞாயிற்றுக்கிழமை (20—5—79) இதழ் 100

# திருமலை, வடக்கு உள்ளூராட்சி நிர்வாகம் கூட்டணிவசமானது

## தென்னிலங்கையில் ஐ.தே.க. அமோக வெற்றி

## வல்வையில் கூட்டணிமட்டும் தெரிவு: விசுவநாதன் யாழ். மேயர்

"குட்டிப் பொதுத்தேர்தல்" என்று வர்ணிக்கப்பட்ட, நேற்று நடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் தென்னிலங்கையில் மாநகரசபை, நகரசபைகள் ஆகியவைகளின் நிர்வாகத்தை ஐக்கியதேசியக் கட்சியும் வடக்கு மாகாணத்திலும் கிழக்கில் திருக்கோணமலையிலும் மாநகரசபையினதும் நகரசபையினதும் நிர்வாகத்தை தமிழர்விடுதலைக் கூட்டணியும் கைப்பற்றியுள்ளன.

### யாழ்ப்பாணம் [மாநகரசபை]

ஸ்தானங்கள்-23

| | |
|---|---|
| மொத்தவாக்காளர் | 60,112 |
| வாக்களித்தோர் தொகை | 44,717 |

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| த. வி. கூட்டணி | 29,322 | 18 |
| அ.இ.த. காங்கிரஸ் | 9.385 | 05 |
| ஐ. தே. க | 5.066 | 00 |
| கம்யூ. கட்சி | 949 | 00 |

புதிய உறுப்பினர்கள்:
தமிழர் விடுதலைக் கூட்டணி:
இராசா விஸ்வநாதன் (மேயர்) பிலிப்பு பிரான்சிஸ் சேவியர் (உபமேயர்).
மனுவேற்பிள்ளை அலோசியஸ், நாகலிங்கம் தர்மலிங்கம் செல்லத்துரை, சின்னத்தம்பி தியாகராசா, செல்லப்பா குமாரவேலு, ஆறுமுகம் சோதிலிங்கம், பா. ஷா. முஹிதீன் பிச்சை, சோமசுந்தரம சிவரத்தினம், போக்கியம் அலெக்சாண்டர் செல்வநாயகம், இளையதம்பி முத்தையா, மனுவல் எஸ். பீரியல், தம்பு கந்தையா, சுந்தரம்பிள்ளை சண்முகராஜா, ஆறுமுகம் துரைராசசிங்கம், ரெஸின் முகம்மது இமாம், சுப்பன் ஆறுமுகம், செபஸ்தியாம்பிள்ளை எட்வேட்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
அன்ரன் விகோரி ஏபிரஹாம் திருமதி சாமிநாதர் அந்தோனியா, மீரான்கனிடு முகம்மது காசிம், இராசநாயகம் மரியாம்பிள்ளை, செபஸ்தி யேசுதாஸன்.

### சாவகச்சேரி [நகரசபை]

ஸ்தானங்கள்-11

| | |
|---|---|
| மொத்தவாக்காளர் | 10,729 |
| வாக்களித்தோர் தொகை | 8,632 |

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| த. வி. கூட்டணி | 5457 | 08 |
| ஐ. தே. க. | 1945 | 02 |
| அ. இ. த.காங்கிரஸ் | 1230 | 01 |

புதிய உறுப்பினர்கள்
தமிழர் விடுதலைக் கூட்டணி
சாமுவேல் கந்தவனம் திரவியநாயகம் (தலைவர்), சரவணமுத்து தாமோதரம் (உப தலைவர்)
சின்னத்தம்பி கந்தையா மயில்வாகனம், கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை, கந்தையா வேதநாயகம், சங்கரப்பிள்ளை கந்தையா சின்னத்தம்பி, சுப்பிரமணியம் கந்தசாமி, இரத்தினம் சண்முகலிங்கம்

ஐக்கிய தேசியக் கட்சி
நாகலிங்கம் தருமேந்திரன், யாமு வேலுப்பிள்ளை இராஜரத்தினம்

அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்
சுப்பிரமணியம் பாலசுப்பிரமணியம்.

1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் போலவே இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களிலும் இடதுசாரிக் கட்சிகள் எந்த உள்ளூராட்சிமன்றத்தின் நிர்வாகத்தையும் கைப்பற்ற முடியாது போய் விட்டது.

கடந்த பல வருடங்களின் பின் ஐக்கியதேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட உறுப்பினர்களில் சாவகச்சேரி நகரசபைக்கு இருவரும் பருத்தித்துறை நகரசபைக்கு ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வவுனியா நகரசபைக்கு ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த மூவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வல்வெட்டித்துறை நகரசபைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அனைவரும் தெரிவு செய்யப்பட்டனர். எதிர்க்கட்சியாக எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

வடக்கில் முதலாவது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவாக வவுனியா நகரசபைத் தேர்தல் முடிவுகள் நேற்றிரவு 11 மணி 10 நிமிஷத்துக்கு அறிவிக்கப்பட்டது. கடைசியாக வல்வெட்டித்துறை நகரசபைத்தேர்தல் முடிவுகள் நள்ளிரவுக்குப்பின் 12-40 மணியளவில் அறிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடைபெற்ற பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களில் முதலில் வாக்குகள் எண்ணி அறிவிக்கப்பட்ட போதும் பின் வாக்குகள் முழுமையாக அறிவிக்கப்பட்ட இடங்களிலும் ஆதரவாளர்கள் பெருமளவில் திரண்டு நின்று ஆரவாரம்செய்தனர். யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் நள்ளிரவுக்கும் பின்னரும் பட்டாசு வெடிகளின் சத்தம் ஒலித்துக்கொண்டிருந்தது.

[8ம் பக்கம் பார்க்க]

### கொழும்பு மாநகரசபைத் தேர்தல் முடிவுகள்

இன்று அதிகாலைவரை வெளிவரவில்லை. ஐ. தே. கட்சியே முன்னணியில் நிற்பதாக உத்தியோகப்பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

### பருத்தித்துறை [நகரசபை]

ஸ்தானங்கள்-9

| | |
|---|---|
| வாக்களித்தோர் தொகை | 6 908 |

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| த. வி. கூட்டணி | 3,730 | 6 |
| ஐ. தே. க. | 1,330 | 01 |
| சுயேச்சைக்குழு | 1447 | 02 |
| அ.இ.த.காங்கிரஸ் | 401 | 00 |

புதிய உறுப்பினர்கள்
தமிழர் விடுதலைக் கூட்டணி
மயில்வாகனம் வேலும் மயிலும் (தலைவர்), சேதப்பா வேல்முருகு (உப தலைவர்).
துரைராஜசிங்கம் இரத்தினசிங்கம், மரியாம்பிள்ளை மிக்கேல்பிள்ளை, எமிலியாப்பிள்ளை அருளானந்தம், நவரத்தினம் தேவராசா.

ஐ. தே. க.
சின்னத்தம்பி வைரமுத்து சந்திரசேகரம்.

சுயேச்சைக்குழு (1)
முருகப்பர் பொன்னுச்சாமி விரவாகு, இலிங்கம் கிருஷ்ணமூர்த்தி.

### வல்வெட்டித்துறை [நகரசபை]

ஸ்தானங்கள் 9

| | |
|---|---|
| வாக்களித்தோர் தொகை | 5991 |

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| த. வி கூட்டணி | 5058 | 09 |
| ஐ. தே. கட்சி | 433 | 00 |

புதிய உறுப்பினர்கள்:
சண்முகம்பிள்ளை ஞானமூர்த்தி (தலைவர்), செல்லையா கந்தையா (உப தலைவர்).
நல்லதம்பி மயில்வாகனம், சிவக்கொழுந்து தவபுத்திரன், சுப்பிரமணியம் இராசேந்திரன், அருணாசலம் இராசரத்தினம், இராயப்பு பாக்கியநாதர், பாலசுப்பிரமணியம் மகேந்திரராசா, சதாசிவம் கணேசலிங்கம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

றலி டிலிவரி சைக்கிலும், கோப்பி கிறைண்டரும் (COFFEE GRINDER) விற்பனைக்குண்டு
வி. அரியரத்தினம், 3-ம் கட்டை, பருத்தித்துறை வீதி கல்வியன்காடு, யாழ்ப்பாணம். 2421

# குமுலுஸ் எஸ்

அமோக கிராக்கியின் காரணமாக உங்கள் அபிமான இந்தக் கிருமி நாசினியின் கையிருப்புக்கள் யாவும் விற்பனையாகிவிட்டன. புதிய கையிருப்பு கிடைத்ததும் உங்களுக்கு அறிவிப்போம்.

## மக்வுட்ஸ்

லிமிட்டெட்,
297, யூனியன் பிளேஸ்,
கொழும்பு-2.
தொலைபேசி: 32941.

2496

## தேவை

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க இருக்கும் மோட்டார் மிக்கு ஒன்றுக்கு வேலை செய்யக்கூடிய ஒருவர் பங்காளியாக தேவை தொடர்புகொள்ளவும். அ. கதிர்காமர், 53/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2478

பிடவை வியாபாரம் செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 21, நவீன சந்தை, 21, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 2482

## பயிற்சி

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் மிகவும் சுலபமாக வேலைவாய்ப்பைத் தேடித்தரக் கூடிய படிப்பு படவரைஞர் பயிற்சி (Draughtsmanship) அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்களால் 02-06-79ல் இருந்து நடாத்தப்பட இருக்கின்றது விண்ணப்பங்கள்,- அதிபர், கிறபிக்ஸ் டிசைனர்ஸ், 9/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2450

# CANTABIA INSTITUTE

## Nov/Dec 1979 பரீட்சைகளுக்குரிய வகுப்புகளின் ஆரம்பம்:

I C M A — Section A&B—11-6-79
I C M A —Section A Week End Classes) 16-6-79
I A A —Parts I&II 12-6 79 Parts III&IV 16-6-79
CHARTERED-PRELIMINARY
2nd Term/Revision — 11-6-79
ஆங்கிலம் — Mr I. T. Benedict இன்
30 மணித்தியாலப் புதுமை வகுப்பு 2-7-79

லண்டனில் (London) இப்பரீட்சைகளுக்கான பதிவு ஏற்பாடுகள் யாவும் இலவசமாகச் செய்துதரப்படும்.

- ஆரம்ப மாணவர்களுக்கு ஏற்ற பயிற்சி
- அச்சடித்த நவீன பாடக்குறிப்புகள் இலவசம்
- அநேக பரீட்சை வினாக்களுக்கு விளக்கவுரை
- பரீட்சை முன் கருத்தரங்குகள்
- கொழும்பு OXONIA வின் முன்னணி விரிவுரையாளர்கள்

பாடப்புத்தகங்கள் இன்றி
வாசிகசாலைகள் பக்கமே போகாமல்
படித்துப் பட்டம்பெற

தொடர்புகொள்ளுங்கள்: 166, HOSPITAL ROAD, JAFFNA.

2447


# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

நல்லூரில் "அரகேசரி வளவு" என்றழைக்கப்படும் நாலு நிலப்பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு திருமதி டாக்டர் இந்திராணி, ஜயவர்த்தன வெலிக்கடவத்த 572/5 நாவெல்ல வீதி, ராஜகிரிய. 2440

புதிய லிஸ்ரர் 2" டீசல் பம்ப்; J K. 3 போட் கிருங்கு நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 8-A, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 2463

கூடுதல் பயன்தரக்கூடிய நல்ல இன செவ்விளநீர் தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு மிக்கவைற், யாழ்ப்பாணம். 2469

9 ஸ்ரீ வெள்ளை நிற 3 மீற்றர் 404 கார் றேடியோவுடன் விற்பனைக்குண்டு எந்நேரமும் பார்வையிடலாம். C. கனகையா, 61, கண்டி வீதி யாழ்ப்பாணம் தொலைபேசி: 7239 அல்லது S. S யோகராசா, வின்சர் தியேட்டர், யாழ்ப்பாணம். தொலைபேசி:466.

2492

## சோதிடம்

குறிப்பு பார்த்து பலன் கூறுவதின் மூலம், உங்கள் பிரச்சனைகள் (விவாகம், கல்வி, உத்தியோகம் தொழில் முதலியன) தீர்த்துவைக்கப்படும் KL. M. Krishnapillaiy, ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிட நிலையம், கந்தசுவாமி கோவிலடி, மாவிட்டபுரம். 2487

## WANTED

An experienced Accounts/Typist (English) Clerk (either sex) for a Travel Organisation Salary according to qualification and experience Apply giving full Bio-data on or before 28-5 79 Advertiser. 26, Model Market (Up Stairs), Jaffna
2498


## நன்றி நவிலல்

திரு. வரதராஜன் அவர்களுடைய மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் கொடுத்தவர்களுக்கும் இதினால் நன்றி பகருகின்றோம். தனித்தனியாக நன்றி கூறமுடியாமைக்கு வருந்துகின்றோம். முதலியார் சுவ மகேசன், திருமதி வரதராஜன் மற்றும் குடும்பத்தினரும், லிங்கவாசா, நவாலி, மானிப்பாய். 2473

## நான்காம் வருட நினைவாஞ்சலி



அம்பலவாணர் கிருஷ்ணபிள்ளை

தோற்றம்: 20-5-1894

மறைவு: 24-9-1975

அளவெட்டி அம்பலவாணர் கிருஷ்ணபிள்ளை அவர்களது 85வது பிறந்த தினம் 20-5-79 ஞாயிறு இன்றாகும்.

அன்னாரின் ஆணைப்படி அவரது மகன் பரவைத்தியர் திரு. கி. நித்தியானந்தன் அளவெட்டி ஞானவைரவர் கோவிலில் இன்று நண்பகல் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளவும். நன்றி.

கி. நித்தியானந்தன்,
பரவைத்தியர்.
167 -1(63), மின்சார
நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
2494

## பேராசிரியருக்கு இன்றுகாலை விருந்துபசாரம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள அண்ணாமலை பல்கலைக்கழக துணைப்பேராசிரியர் ஆறு அழகப்பனுக்கு இன்று காலை நல்லை ஆதீனத்தில் முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தினர் தேனீர் விருந்தளித்துக்கௌரவிப்பர். (கு)

## தற்கொலை

[சங்கானை]

கடந்த திங்கட்கிழமை சங்கானை மண்டிகைக் குளத்திற்கருகாமையில் இடுப்பில் நச்சுத் திராவகப் போத்தல் ஒன்றுடன் இறந்துகிடந்த நபர் இனங்கண்டுபிடிக்கப்பட்டார்.

இறந்தவர் பிராம்பற்றையைச் சேர்ந்த கதிரித்தம்பி செல்லத்துரை என்று இறந்தவரின் சகோதரர் குமாரசாமி மரணவிசாரணையில் வாக்குமூலம் அளித்ததைத் தொடர்ந்து நச்சுத்திராகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார் என்று மரணவிசாரணை அதிகாரி திரு. கே. சேனாதிராசா தீர்ப்பளித்தார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



# Trust Travel Service

11-A MOMSAC BUILDING
Stanley Road;
Jaffna
Telephone No: 8111





- AERO FLOT விமானத்திற்கான டிக்கட்டுகளை எம்மிடம் குறைந்த செலவில் கூடிய விரைவில் பெற்றுக்கொள்ளலாம்.
- சகல ரவல் ஏஜென்சிகளும் AERO FLOT விமானத்திற்கான டிக்கட்டுகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். விசேட கமிஷன் வழங்கப்படும்.
- AERO FLOT விமானத்திற்கான டிக்கட்டுகளை எம்மிடம் பெறுபவர்களுக்கு கடவுச்சீட்டு இலவசமாகப் பெற்றுக்கொடுக்கப்படும்.
- குளிரூட்டப்பட்ட சிதம்பரம் கப்பலில் சிங்கப்பூருக்கு உல்லாசப்பிரயாணம்.

16-ம் திகதி JUNE மாதம் திருகோணமலையில் இருந்து சிங்கப்பூர் நோக்கி புறப்படும்.
முன்கூட்டியே 50வீதம் பணம்செலுத்தி டிக்கட்டுக்களைப் பதிவுசெய்துகொள்ளவும். உங்கள்வசதிக்கேற்ப பிரயாண ஒழுங்குகள்செய்து கொடுக்கப்படும்.
கொழும்பில் இருந்து சிங்கப்பூருக்குச் சென்று பின்பு சிங்கப்பூரில் இருந்து சிதம்பரம் கப்பலில் திருகோணமலைக்கு வருவதற்கான ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்படும்.

★ Passenger Sales Agent For Aero Flot

## Trust Travel Service

11/A மொம்சாக் கட்டிடம், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
Telephone No: 8 11



# நியாயங்கள் செத்தால்!

குப்பி விளக்கின் மங்கிய கதிர்கள் அந்தச்சின்னஞ்சிறு வீட்டினுள் மெதுவாகப் படர்கின்றன...

'மனிதனின் அத்தியாவசிய மான மூன்று தேவைகள் உணவு, உடை, வீடு '

பொன்னுத்துரையின் மூத்த மகள் அந்த மங்கிய குப்பி விளக்கின் வெளிச்சத்தில், நாளைக்கு ரீச்சர் கேட்கின்ற கேள்விக்குச் சரியான விடை பகர ஆயத்தம் செய்கிறாள். அவளின் முயற்சி தொடர்கிறது

'மனிதனின் அத்தியாவசிய மான மூன்று தேவைகள் உணவு உடை வீடு...'

உண்ண உணவு இல்லை: உடுக்க உடை இல்லை; இருக்க சொந்த வீடு இல்லை

அத்தியாவசியமான மூன்று தேவைகளுமே பொன்னுத்துரைக்கோ, பொன்னுத்துரையின் மகளுக்கோ போதுமான அளவு இல்லை. பொத்தல் விழுந்த சாரத்தை சரிசெய்து கொண்டு எழும்பிய பொன்னுத்துரையை மனைவியின் கேள்வி குத்தி இருக்கச்செய்து விட்டது.

'நாளைக்கு வழக்கு என்ன செய்யப் போறியள்...ஒரு பரிசமாக உழைச்சு உழைச்சு பாத்த வேலை விட்டுக்காக வழக்கபடித்தானே-சலிப்புடன் பேசிக்கொண்டு வந்தவள் பொன்னுத்துரை அசந்து போய் இருந்ததைக் கண்டதும் பேச்சை மாற்றிக்கொண்டாள்

மனைவி கொண்டு வந்து தந்த தேயிலை சாயத்தையும் கருப்பட்டியையும் அவர் ஒருவகை பார்த்துக்கொண்டிருந்தார்.

கணவனும் மனைவியும் அருகே-மிக அருகே இருந்தார்கள்.

மனிதனின் அத்தியாவசிய மான தேவைகள் என்னவென்பதை பாடமாக்கிக் கொண்ட பொன்னுத்துரையின் மகள் அந்தத் தேவைகள் எதுவுமே சரிவர நிறைவேற்றப்படாத தால் என்னவோ பெரிதாகக் கொட்டாவி ஒன்றை விட்டுக் கொண்டே கண்ணிரண்டையும் கசக்கிவிட்டுக்கொண்டாள்.

அவளின் வகுப்பு முன் வரிசையில் இருக்கின்றவர்கள்-கலையாமல் வெள்ளை நிற யூனிபோம் அணிந்து காரில் வந்து இறங்குகிறவர்கள்-மனிதனின் அத்தியாவசிய மான தேவைகள் மூன்றையுமே சரிவர அனுபவிப்பவர்கள்-ரீச்சா கேட்கின்ற அந்தக் கேள்விக்கு விடை சொல்லுவார்களோ தெரியாது'

பொன்னுத்துரையின் மகள் சொல்லுவாள்!

நாளைக்கு மாவட்ட நீதிமன்றத்தில் கேட்கின்ற கேள்விகளுக்கு பொன்னுத்துரை மறுமொழி சொல்லுவாரா?

'நாளைக்கும் உங்களைத் தானே விசாரிக்கிறது-?' என பொன்னுத்துரையின் மனைவி கேட்டாள்.

'பயப்படுகிறயா...ஆ... பயப்படுகிறயா...உண்மையைத்தானே சொல்லப் போகிறேன் நாளைக்கு கோயில சொல்ல இருக்கிறது நடந்ததைத்தானே. அவர்கள் சொல்லப்போவதுபுத்தகத்தில உள்ள சட்டத்தையும் பொய் சாட்சிபத்தையும்தான். தீர்ப்பு எப்பக்கமோ அதை ஏற்பதோ விடுவதோ வேறை விசயம்.

அவர் கண்முன்னே விரிந்தது. கற்பாறைகள். முட்செடிகள், மேடுகள், பள்ளங்கள்...

இப்போது—

குலை தள்ளிய வாழைகள் ஒருபுறம்! சமவயதுள்ள இளந்தென்னைகள் இன்னொரு புறம், எலுமிச்சை, தோடை, பலா...எல்லாமே காயும் பிஞ்சுமாக வளர்ந்துநிற்கின்றன.

..."பாத்தியா...என்னை ர வேர்வையில வளர்ந்துநிற்கிற மரங்களை பாரன்...இதில வாற பலனெல்லாம் நாமா அனுபவிக்கப்போறம். இந்தக் காணிச் சொந்தக்காரன்தான் அனுபவிக்கப்போறான்... சத்தியமாச் இந்தப் பலனெல்லாவற்றையும் நான் அனுபவிக்க முடியாது என்டு வருத்தப் படேல்லை, கோபப்படேல்லை, ஆனால் அவன் சொன்னவாக்கு மாறி நிற்கிறதை நினைக்கத்தான்.''-பொன்னுத்துரை மனைவியை ஆழமாகப் பார்த்தார், அருடைய கண்கள்...?

கண்களா அவை? நீறு பூக்காத இரண்டு தணல் கம்பிகள்!

வழக்கைப்பற்றி இனி ஏதாவது பேசப்போய் பொன்னுத்

வேண்டுமென்ற புதியபணி பொன்னுத்துரையின்மேல் சுமத்தப்பட்டது

சும்மாவாக அல்ல; சிறிய சலுகையுடன்!

அந்தச்சலுகை காணிச் சொந்தக்காரரான பெரிய மனிதனுக்கு அற்பமானதொரு விஷயம். ஆனால் ஒரு குழி நிலத்திற்கு சொந்தக்காரனில்லாத பொன்னுத்துரைக்கு...?

"ஐந்துஏக்கர் காணியையும் திருத்து, ஒரு ஏக்கர் காணியை இவ்வளவு காலமும் நீ உழைச்சதுக்காக எழுதித்தாறன்.''

கல்லும் கனியுமா?

பொன்னுத்துரைக்கு பெரிய மனிதனின் வாயில் இருந்து உதிர்ந்த வார்த்தைகளை

தையும் விளக்கவேண்டியவரிடம் விளக்கினான்.

''வடக்குப்பக்கமாக உள்ள நிலம் உனக்கு... நீ வீட்டைக் கட்டினால் என்ன; தோட்டத்தைச் செய்தாலென்ன... எனக்கு எல்லாம் ஒன்றுதான்-'

அடங்காத் தாகத்தில் நிற்கிறவனுக்கு ஆற்றுத்தண்ணீராக இருந்தாலென்ன? குளத்துத் தண்ணீராக இருந்தாலென்ன?

பொன்னுத்துரைக்கு தேவையானது, ஒருதுண்டுநிலம், ஒரு வீடு: அதுஎந்தப்பக்கமாகஇருந்தாலும் அவனுக்குக் கவலை இல்லை. வடக்கும் கிழக்கும் வரண்டது என்றால் வளம் கொழிக்காமலா இருக்கிறது-?

பொன்னுத்துரையும்லட்சுமியும் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார்கள். மனிதனின் அத்தியாவசியமான தேவைகள் என்னவென்பதை பாடமாக்கிக்கொண்டவள் வெறும்தரையில் சுருண்டு படுத்துக்கிடக்கிறாள்.

அவளைப் பெற்றபோதுதான் பொன்னுத்துரைடா அந்தவீட்டைக்கட்டி முழுமையாகமுடித்தான்? அதேநேரம் மற்றநான்கு ஏக்கர் காணியிலும் தேவையான பயிர்களை உண்டுபண்ணினான். பொன்னுத்துரை நான்கு பிள்ளைகளுக்குத் தகப்பனாகியபோது நான்கு ஏக்கர் காணியும் சோலையாகிவிட்டது.

வெளியே மழை தூறிக் கொண்டிருந்தது—

'ரஸ்கல்-! என்னை மாய் மோசம்செய்து போட்டான்... பணக்காறக் கூட்டத்தின்ரை குணமே அப்படித்தானே! அத்துமீறிக் குடியேறியிருப்பதாகத்தானே இப்ப அவன் சொல்கிறான்...வழக்கு முடியட்டும்—'

## 'செங்கதிர்'

ஆனால் இந்தக் காணியைக் காணியாக்கி இந்த வீட்டைக் கட்டப்பட்ட பாடு—'

பொன்னுத்துரையின் நா தழுதழுத்துவிட்டது. கண்ணீரால் கண்கள் நிறைந்துவிட்டன. மனைவியின் மடியினுள் முகத்தை புதைத்தவாறே விம்மி விம்மி அழுதார் பொன்னுத்துரை. வாருங்கோ வெளியாலை இருந்து பேசுவோம்...'

பொன்னுத்துரையின் தோளைப்பற்றி மெல்லத் தூக்கினாள்.

ஒன்றின் துன்பத்தை மற்றொன்று தனதாக்கி துன்பத்திற்கும் சம பங்கு அனுபவிக்கின்ற அந்த இரண்டு நல்ல இதயங்கள் வெளியே வந்து நின்றன

பொன்னுத்துரையின் கண்கள் அந்தக் காணியின் நாலா பக்கத்தையும் நோட்டம் விட்டன.

அவர் இந்தக் காணிக்குள் காலடி வைக்குமுன்னர் அந்தக் காணி கிடந்த காட்சி

துரை அடிக்கடி சொல்லுவது போல இப்போதே செய்யத் துணிந்தாலே—? மனைவியின் உடலெல்லாம் இடுகிடுத்தது,

"இஞ்சைபார்... இந்தக் காணிச் சொந்தக்காரன் இருக்கிறானே, அவனுக்கு இந்தத் தோட்டத்திலை மட்டும் நான் உழைச்சுக்கொடுக்கேல்லை, அவன்ரை வீட்டில உள்ள கோழிப்பண்ணையிலையும், மாட்டுப் பண்ணையிலையும் கூட நான் உழைச்சுக் கொடுத்திருக்கிறன். அவனுக்காக ஒரு நாளைக்கு எத்தனை கோழியை நான் வெட்டியிருப்பன் தெரியுமா? அவன் செய்திருக்கிற நம்பிக்கைத் துரோகத்தை நினைக்க... என்னைப் பிள்ளைபல் தேவ்பனில்லாத பிள்ளையாய் போய்விடும் எண்டு பார்க்கிறன்...'

பொன்னுத்துரை பொறுமையை இழக்கும்போது அப்படித்தான் ஆத்திரமாகக் கத்துவார்.

பொன்னுத்துரையின் மனைவி ஒன்றுமே கதைக்கவில்லை, அவர் படும் அவஸ்தைக்கு அவளும் ஒரு காரணம் என்பதை பூரணமாக நம்பியதால் அவள் மௌனமாகிவிட்டாள்.

"நியாயங்கள் செத்தா போய்விடும்...வாங்கோ போவம்—' சொல்லிவிட்டு வீடு நோக்கி நடந்தாள். என்றாலும் அவள் நினைவில் அவளால்தான் அவர் அத்தனை அவஸ்தைக்குள்ளாகி இருக்கிறார் என்பதை மறக்கமுடியவில்லை.

பொன்னுத்துரையின் தாய் இறந்தபிறகு வீடோ; வாசலோ; உற்றாரோ; உறவினரோ'; வேண்டாமென்று ஒதுக்கித்தள்ளிவிட்டு ஓடிவந்த பொன்னுத்துரைக்கு தன்னுடைய வீட்டிலும் தோட்டத்திலும் வேலை வழங்கினார். பல ஏக்கர் தோட்டங்களுக்குச் சொந்தக்காரரான அந்தப் பெரிய மனிதர் 'பரந்த உள்ளம்!'

பிறந்த மண்ணையும்-இரத்த உறவினர்களையும் மறந்து போய் வந்தவன் தோட்டச் சொந்தக்காரனின் தோட்டங்களிலும் வீட்டில்உள்ள கோழிப்பண்ணையிலும், மாட்டுப்பண்ணையிலும் உழைத்தான்; இரவு பகலாக உழைத்தான் தனக்கென்று ஒன்றுமே சேர்க்காமல் செல்வம் நிறைந்தவர்க்குச் சேர்த்துக்கொடுக்க இரத்தம்சிந்தி உழைத்தான். பலன்...?

காலவைக்கமுடியாத ஐந்து ஏக்கர்காணி திருத்திக்கொள்ள

கேட்டபின்னர் அதில் எள்ளளவும் சந்தேகமே இல்லை.

கல்லும் கனியும்! கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் கொண்ட பொன்னுத்துரை நம்பினான்-முழுமையாக நம்பினான். ஐந்து ஏக்கர் காணியையும் அவன் திருத்தத்தொடங்கினான், சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு அவன் விரிந்த மார்போடு அந்தக் காணியில் திரிந்தபோதுதான் லட்சுமி, பொன்னுத்துரையை சந்தித்தாள்.

உருண்டுதிரண்ட அவன் தோளையும், திறந்த நெஞ்சும் கள்ளமற்ற லட்சுமியின் நெஞ்சில் நஞ்சை வளர்த்தது.

அவள் அடிமையாளன்! காதற்கீதம் இசைத்து வானில் பறக்கவேண்டிய பச்சைக்கிளி கூட கூண்டில் நின்றும் வெளியேற ஆசைகொள்ளுமென்றால் வீட்டை விட்டு வெளியேறி பொன்னுத்துரையோடு சங்கமமாக லட்சுமி முடிவுகட்டிவிட்டாள் என்றால் ஆச்சரியம் என்னவாம்?

லட்சுமியின் முடிவால் பொன்னுத்துரை ஆச்சரியப் பட்டிருந்தால் பரவாயில்லை. அதிர்ந்தே போய் விட்டான்.

...லட்சுமியை தன் இதயத்தில் இருத்தி தாலாட்ட பொன்னுத்துரையால் முடியும். இல்லறம் நடத்த ஒரு வீடு-?

பொன்னுத்துரை தன்னுடைய ஆசையையும் எண்ணத்

லட்சுமி அவனது இதழை மெதுவாகப் பொத்தினாள்.

"எந்த நேரத்திலயும் இதுதானோ யோசனை-?' லட்சுமி கிசுகிசுத்தாள். இத்தனை வருடத் தாம்பத்தியவாழ்க்கையில் அந்தக் கிசுகிசுப்புக்கான காரணம் அவனுக்குப் புரியாமலா போய்விடும்.

லட்சுமியினதோ-பிள்ளைகளினதோ அத்தியாவசியமான தேவைகளை நிறைவேற்றமுடியாத பொன்னுத்துரை தன்னால் இயன்ற தேவைகளையாவது நிறைவேற்ற மறுத்தால்-?

உக்கிவிட்ட கிடுகுக்கூரையினூடு மழைத்துளிகள் சொட்டுச் சொட்டாக பொன்னுத்துரையின்முதுகில்பட்டுதெறிப்பதை பொன்னுத்துரை உணரும் நிலையில்லை என்றால் லட்சுமி எப்படிப் புரிந்துகொள்ளுவாள்?

° ° °

இருதரப்பு விவாதங்களையும் கவனித்து சட்டப்புத்தகங்களை புரட்டிப்பார்த்து வாதியினதும் பிரதிவாதியினதும் வாக்குமூலங்களை அலசி ஆராய்ந்து நீதிமன்றம் தீர்ப்புவழங்கிவிட்டது.

உண்மையும் பொய்யும், சட்டமும் நீதியும் மோதிய போது தீர்ப்பு எந்தப்பக்கம் சாய்ந்தது?

நியாயங்கள் செத்தாபோய் விடும்? நேற்று இரவு லட்சுமி

[7-ம் பக்கம் பார்க்க]

ராஜு ஸ்ரோர்ஸ்

எங்களிடம்

இனிப்பு - குளிர்பானங்கள் - ஐஸ்கிறீம்-கேக் மற்றும் சாப்பாட்டுக்குத் தேவையான

இறக்குமதிசெய்யப்பட்ட பழச் சத்துக்கள்- பழ ரசங்கள்-கலர் தினிசுகள்—நெற்குத்தும் மாவு அரைக்கும் இயந்திரங்கள்- அதன் உபஉறுப்புக்கள்- மின்சார மோட்டோர்கள்- மின்சார உபகரணங்கள்-விதம்விதமான விளையாட்டுச் சாமான்கள்- அன்பளிப்புப் பொருட்கள் - குழந்தைகளும், வளர்ந்தவர்களும் பாவிக்கத் தகுந்த பால்மாவுவகைகள் மற்றும் பலவித

இறக்குமதி செய்யப்பட்ட பிஸ்கற் - சாய்ப்புச் சாமான் - கிளாஸ் - எனமல்-அலுமினியம்- பிளாஸ்ரிக் சாமான்களும்

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம்செய்யுங்கள்

ராஜு ஸ்ரோர்ஸ்

தபால்பெட்டி நிர்: 64

67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

போன் ) 372 ) தந்தி) ராஜு)

கோப்பி என்று கேளாதீர்கள்

Brownson

பிரவுண்சன் கோப்பி

என்று கேளுங்கள்

# தரப்படுத்தலால் பிற மாவட்ட தமிழ் மாணவர்க்கு நன்மை!

பழைய சோஷலிச அரசாங்கம் போன்று இன்றைய தார்மீக அரசாங்கம் பல திறமை மிக்க யாழ். மாவட்ட மாணவர்களை பல்கலைக்கழக அனுமதியினின்றும் கதவடைப்புச் செய்துவிட்டது. ஆனால் போற்றுதற்குரிய விடயம் மன்னார், வவனியா, முல்லைத்தீவு, திருகோணமலை; மட்டக்களப்பு மாவட்ட மாணவர்கள் பெற்றுள்ள சர்வகலாசாலை அனுமதி தென்பகுதி மாணவர்களே பொறுமைப் படும்படியாக அமைந்திருக்கிறது! உண்மையில் இப்படித்தான் நடந்திருக்கவேண்டும். யாழ். மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டிய இடங்கள் ஏனைய தமிழ் மாவட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது யாழ். மாவட்டத்தவர் பிரிவினை கோருகிறார்கள். தேசிய அபிவிருத்தியில் பங்கேற்கிறார்களில்லை (ஆனால் மிளகாய், வெங்காயம் உற்பத்தியில் பங்கேற்கிறார்கள்தான், அது வேறு விடயம்) எனவே அவர்களை எந்திரவியலாளர்கள், டாக்டர்கள் ஆக ஆக்குவதில் பயனில்லை என அடுத்தடுத்து ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் நினைக்கின்றன போலும்.

சர்வகலாசாலையில் படிப்பதற்கு க.பொ.த [உயர்தரப்] பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தாலே போதும். உயர்தரப் பரீட்சையில் நன்கு சித்தியெய்தியவன் பல்கலைக்கழகப் பரீட்சையில் கோட்டைவிடுவதும், குறைந்த தரத்துடன் அனுமதி பெற்றவன் பல்கலைக்கழகப் பரீட்சையில் நன்கு சித்தி பெறுவதும் வித்தையானதல்ல. இந்நிலையில் தேசியச் சொத்தான பல்கலைக்கழகத்தை ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து வரும் மாணவர்கள் ஆக்கிரமிப்பதை மற்றைய பகுதி மாணவர்கள் விரும்பமாட்டார்கள். அவர்கள் இன்று விழிப்படைந்து விட்டார்கள். இன்று யாழ். மாவட்ட மாணவர்கள் ஒரு பகுதியிலும் ஏனைய மாவட்ட மாணவர்கள் மறு பகுதியிலும் நிற்கிறார்கள். இந்நிலையில் யாழ். மாணவர்கள் தனித்து

கிளர்ந்தெழுந்து வேலைநிறுத்தங்களில் ஈடுபடுவது புத்திசாலித்தனமானதுதானா? அன்றி வெற்றிதான் கிடைத்துவிடுமா? என்பதை மாணவர்கள் ஆய்ந்து சிந்திக்குக.

### பயன் பெற்றது யார்?

கடந்த 6-7 வருடங்களாக யாழ். மாவட்ட மாணவர்கள் என்னதான் போராட்

## யாழ். மாணவர் வேறு துறைகளை நாடலாமே!

கள் தம் கிராமமோ குறிப்பிடத்தக்கவகையில் பயன் பெற்றதாகத் தெரியவில்லை. ஒரு பித்திய செய்தி, பருத்தித்துறை தும்பளை கிராமத்தில் பிறந்து தற்போது வெளிநாடுகளில் தொழில் புரியும்

என்றுமே எந்திரவியலாளர்கள் டாக்டர்களாக வரமுடியுமென்றோ, கிழக்கு, மேற்கு, மத்திய இலங்கை மாணவர்கள் விழிப்படைய மாட்டார்கள். அவர்கள் யாழ். மாணவர்களின் கல்வித்தரத்தை

"பல்கலைக்கழகத்தில் யாழ். மாணவருக்குக் கிடைக்கவேண்டிய இடங்கள் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் மாணவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. எனவே யாழ். மாணவர்கள் தனித்து கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டங்கள் செய்வதில் அர்த்தமில்லை. எனவே இவர்கள் வேறு துறைகளில் நாட்டம் செலுத்தினால் என்ன"- இவ்வாறு கருத்து வெளியிடுகின்றார் இந்தக் கட்டுரையாளர்.

இது அவரது சொந்தக் கருத்து. இதற்கு மாற்றுக் கருத்துடையவர்கள் எழுதலாம். தரமானவை தகுதி நோக்கிப் பிரசுரிக்கப்படும்.

(ஆ-ர்)

டத்தை நடத்தியும், வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாகத்தான் முடிந்திருக்கிறது யாழ் மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தை அரசியலுடன் கலக்காமல்சிந்திக்கவேண்டியகாலம் வந்துவிட்டது. இவ்வளவு காலமும் யாழ்'குடாநாட்டில் தோன்றிய எந்திரவியலாளர்கள், டாக்டர்கள் ஆகியோரால் அவர்கள் தம் குடும்பமும், வேலைசெய்யும் நைஜீரியா, சாம்பியா, பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும்தான் பயனடைந்திருக்கிறதேயன்றி இலங்கையோ அன்றி யாழ் குடாநாடோ அன்றி அவர்

நல்லவர்கள் தங்கள் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கென ஒரு நிறுவனம் தொடங்கி அதற்கான ஆயத்தங்கள் செய்யவல்ல

யடைய நெடுநாள் செல்லுமென்றோ நினைப்பது இன்றைய அரசியற் கால கட்டத்தில் அவ்வளவாக நல்லதல்ல. வர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்

ஆர். எஸ். ரி. சிவகுமாரன்
(பேராதனை பல்கலைக் கழகம்)

தேவையென பத்திரிகையில் விளம்பரம் கொடுத்திருந்தார்கள். காலம்தாழ்த்தியேனும் இவர்கள் எடுக்கும் முயற்சி பாராட்டுதற்குரியது.

### வேறுதுறைகள்

யாழ் மாணவர்களின் தான்

றுக் வாழ்க்கை இலகுவாகின்றதுதான். ஆனால் நமது முன்னைய பட்டதாரிகளின் திறமைகள், செய்கைகளைப் பார்க்கும்போது, பல்கலைக்கழகங்களுக்குப் போகாமலிருப்பது நன்று என்பது இக் கட்டுரையாளரின் கருத்தாகும். யாழ் மாணவர்கள் நன்கு ஈடுபடுவல் புரியாத பல துறைகள் இருக்கின்றன. இவற்றுள் இலங்கை நிர்வாக சேவை [S L A S] இலங்கை வெளிநாட்டுச் சேவை ]S. L. F. S ] இலங்கை கணக்காளர் சேவை ]State A S[, உல்லாசப் பயணத்துறை (Tourist Industry) என்பவை முக்கியமானவையாகும்.

மேற்கூறியவற்றின் உல்லாசப் பயணத்துறைக்குள் வரும் ஹோட்டல்களின் நிர்வாகம் [Hotel Management] மிகவும் முக்கியமானது இங்கு யாழ் மாணவர்கள் பெரிதும் விரும்பும் பணமும், வெளிநாட்டு வேலைகளும் இலகுவில் கிடைக்கிறது. இன்றைய அரசாங்கம் மேற்குக் கரையோரத்திற்கு இணையாக கிழக்குக் கரையோரங்களுக்கும் குறிப்பாக திருகோணமலைக்கு உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் விதத்தில் பல கோடிக்கணக்கான ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்போகின்றது. இதனால் திருகோணமலையில் பல ஹோட்டல்கள் வரப்போகின்றன எனவே யாழ் மாவட்ட கெட்டிக்கார மாணவர்களே உங்கள் திறமையை அரசாங்கம்தான் பயன்படுத்தத் தவறிவிட்டாலும் தனியார் துறையினர் குறிப்பாக உல்லாசப்பயணத் துறையைச் சேர்ந்தவர்கள் உங்களது கடின உழைப்பை மிகவும் வேண்டி நிற்கிறார்கள்

எனவே ஆங்கிலமும் சிங்களமும் படியுங்கள், கொழும்பு ஹோட்டல்பாடசாலை நோக்கி விரையுங்கள், பின்னர் திருகோணமலை திரும்புங்கள். பின்னர் உங்கள் முன்னோர் போன்று வெளிநாடு செல்லுங்கள். உல்லாசமாகப் பொழுதுபோக்குங்கள், உங்கள் அலுவல்களைத் தனியே நன்கு பார்த்துக்கொள்ளுங்கள். இங்கே யாழ் மாவட்டத்தில் உங்கள் பின்னோர்கள் 'பழைய குருடி கதவைத் திறவடி' கதையாக சர்வகலாசாலை அனுமதி கோரி வேலைநிறுத்தம் செய்துகொண்டிருப்பார்கள்.

### இலகுவாக வாழ்க்கை நடத்த...

வாழ்க்கையை ஒரு சவாலாக ஏற்காமல், போராட்ட துடி துடிப்பு உணர்வு இல்லாமல், வாழ்க்கைச் சவாரியை இலகுவில் நடத்த விரும்பும் அதாவது பல்கலைக்கழகமே தங்களுக்குக் கதி, துணை என்றிருப்பவர்களுக்கு என்ன செய்யலாம்?

தற்போது இலங்கைப் பல்கலைக்கழகங்களால் நிராகரிக்கப்பட்ட திறமை மிக்க யாழ் மாணவர்களுக்கு உலகப் பல்கலைக்கழகங்களில் அனுமதி எடுத்துக்கொடுக்கவும், நிதி உதவி செய்யவும் என யாழ் மாவட்ட மாணவர் தாபரிப்பு நிலையம் ஒன்றை தொடங்க இங்குள்ள ஆன்றோர் முயற்சி எடுக்கலாமே.

இலங்கை மாணவர்களின் பட்டப்படிப்புக்கென இந்தியா, ரஷ்யா, சீனா, தாய்லாந்து, ஈராக், லிபியா போன்ற நாடுகள் புலமைப் பரிசில்கள் வழங்குகின்றன. இந்நாடுகளில் நமது கெட்டிக்கார யாழ். மாணவர்களுக்கு படிக்க [பிரசாரத்திற்கல்ல] இடம் எடுத்துக்கொடுக்க பண்ணியவான்கள் யாராவது முயற்சி செய்வார்களா!

யாழ். மாணவர்களுக்கு இந்தியப் பல்கலைக்கழகங்களில் இடம் எடுத்துக் கொடுக்க உதவினால் என்ன? மலேசியா, சிங்கப்பூர் பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் இந்நாட்டுப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் இம்மாணவர்களுக்குத் தங்கள் பல்கலைக்கழகங்களில் இடம் எடுத்துக் கொடுத்து உதவினால் என்ன? வெளிநாடுகளில் தொழில் செய்து நல்ல பணம் சம்பாதிக்கும் யாழ்ப்பாணத்தவர்களைக்கொண்டு ஒரு நிதி ஆரம்பித்து இம்மாணவர்கள் பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயில வசதிசெய்து கொடுத்தால் என்ன?

யாழ். மாவட்ட மாணவர்களே அழிவுபூர்வமாகவன்றி, ஆக்கபூர்வமாகச் சிந்திக்குக! செயற்படுக!!

விவசாயிகளே !

உங்கள் விவசாயப் பிரச்சினைகள் எதுவானாலும் எங்கள் இலவச அறிவுரைகளுக்கு இன்றே நாடுங்கள்.

எங்களிடம் கலப்படமற்ற

★ கிருமி நாசினிகள்
★ பசளை வகைகள்
★ தெளிகருவிகள்
★ உதிரிப்பாகங்கள்
★ நீர் இறைக்கும் இயந்திரங்கள்
★ அல்கத்தீன் குழாய்கள்
★ மண்வெட்டி, அலவாங்கு முதலிய

விவசாய உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



AGROS

அக்ரோஸ் லிமிட்.

56, கந்தப்பசேகரம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(புதிய நிர்வாக அதிகாரி :- ஜெகதீசன்ஸ், கொழும்பு.)

## வெயில் எறிக்குது

வெயில் எறிக்குது
வேதனை தருகுது
வேகுது உலகமெலாம்

பசுமைப் பச்சைகள்
பறந்து ஒழியப்
பாரிபற்றி எரிகிறது.

வையம் எல்லாம்
வனாந்தர மாகி
வாடிக் கிடக்கிறது.

கையிற் குடையும்
காலிற் செருப்பும்
கனலைக் கக்கிறது.

உடம்பு முழுதும்
உலைவாய் நெருப்பு
ஊசியில் பாய்கிறது.

செல்வி
சி. ஞானச்செல்வி

# தசாம்ச எண்சோதிடத்தில் உங்கள் வார பலன்

[20-5-1979முதல்26-5-1979 வரையுமுள்ள கால பலன்]

இப்பலன்கள் பிறந்த தேதி எண்ணைக் (அதிர்ஷ்ட எண்) கொண்டே பார்க்கவேண்டியது ஆண்டு, மாதம், தேதி மூன்றையும் கூட்டிய கூட்டெண்ணுக்கும் (விதி எண்) பொருந்தும் பெயர்எண்-மற்றுமெண்களும் சரிவர அமையுமானல் இப் பலன்கள் கூடுதலாகவே அமையும்,

இவ்வாரத்துக்குரிய பூர்வ ஜென்மதி தொடர்பு எண்-9. விதி எண்-6 அதிர்ஷ்ட எண் - 2, ஊழ் எண்-7, வினை எண்- 5. நியதி எண்-1, நியம எண்-1 ஆக அமைகின்றது.

இந்த வாரம் உலக அரங்கில் மத்திய கிழக்கில் பொதுவாக இஸ்லாமிய நாடுகளுக்கு கஷ்ட நஷ்டம் கூடுதலாக இருக்கும் சமாதானத்தை நாடும் உலக நாடுகளின் குரல் கூடுதலாய் கேட்கும். அரசியல் திடீர் புரட்சிகளும் தோன்றக்கூடும் சனிக்கிழமை கூடிய அசம்பாவிதங்கள் நடக்கக்கூடும். செவ்வாய்க்கிழமையும் சனிக்கிழமையும் விசேட கருமங்களை விலக்கிக்கொள்ளவும். புதன்கிழமை விசேட கருமங்களுக்கு நல்லநாள் புதன்கிழமை பிறக்கும் குழந்தை இராஜதந்திரியாக பெருமபுகழ்பெறக்கூடும் குழந்தையாகும். இக் குழந்தைக்கு நிரைவரிசையில் அனுகூல எண் -9 வரக்கூடியதாகப் பெயர்வைத்தல் உத்தமம்.

## எண் 1

இவர்களுக்கு இந்தவாரம் எதிர்பாராத வெற்றிகளைக் கொடுக்கும் வாக்குச்சாதுரியத்தால் பெரியோர்களின் மதிப்புக்கிடைக்கும். திருமணவயதடைந்தவர்களில் சிலருக்கு அதிர்ஷ்டகரமான விவாகமும் பெரிய பதவிகளும் தேடிவரும். வியாபாரிகளுக்கு தொழில் முன்னேற்றமுண்டு. பெருமுதலுடன் பங்காளிகள் தாமாகவே வந்துசேரவும்கூடும், உத்தியோகஸ்தர்களுக்கும் முன்னேற்றமுண்டு, சனிக்கிழமை அவதானம் வேண்டும்.

## எண் 2

இவர்களுக்கு இந்தவாரம் முற்பகுதி போராட்டமும் சோதனையும் நிறைந்திருக்கும் எனினும் பிற்பகுதி வெற்றியைக்கொடுக்கும், நண்பர்களின் கரைச்சல் மன அமைதியைக் கொடுக்கும், எதிர்ப்புகள் தோன்றினும் சமாளித்துக் கொள்வீர்கள், தன்நம்பிக்கை இருக்கவேண்டும், உத்தியோகஸ்தர்களுக்கு கடும் உழைப்பும், பொறுப்பும் கூடும், குடும்ப சுகம் சிறிது பாதிக்கக்கூடும், செவ்வாய், சனிக்கிழமைகளில் அவதானம் வேண்டும்.

## எண் 3

இவர்களுக்கு இந்த வாரம் ஆரோக்கியம் பாதிக்கக்கூடும். இவர் தன் சந்தோஷத்திலும் லாபத்திலுமே கண்ணாயிருப்பர். தொழில் தானத்தில் சிக்கல்கள் ஏற்படும். காதலர்களுக்குத் தடுமாற்றம் உண்டு, உழைப்பைப்பிறர் தட்டிக்கொள்ளவும்கூடும், ஊக்கத்தால் வெற்றிகாணவேண்டும், பிறரை நம்பினால் ஏமாற்றம் ஏற்படும். வயது முதிர்ந்தவர்கள் தேக ஆரோக்கியத்தில் மிகவும் கவனம்வேண்டும். சனிக்கிழமை அவதானம் கூடுதலாய் வேண்டும்.

## எண் 4

இவர்களுக்கு இந்த வாரம் எதிர்பாராத பொருள்நட்டம் ஏற்படலாம், எதிலும் ஒரு மாற்று மனப்பான்மை தோன்றக்கூடும், திடமான மனம் இராது. பந்தயங்கள்-போட்டிகள் - குடிபோதைகள் இவற்றில் ஏதாவதொன்றில் மனம் நாடப்பார்க்கும், முன்யோசனையுடன் கலந்துகொள்ளல்வேண்டும், வியாபாரிகளுக்கு தொழிலில் லாபமுண்டு, செவ்வாய்க்கிழமையும் சனிக்கிழமையும் முன்யோசனையுடன் நடந்துகொள்ளவும்,

## எண் 5

இவர்களுக்கு இந்தவாரம் நல்ல முன்னேற்றமுண்டு, காரியசித்தியுண்டு, போட்டிகளில் வெற்றி கிடைக்கும், வெகுஜனமரியாதை பெறுவர். வாகனப்பேறும் உண்டு, நன்மையான தேவைகளின் நிமித்தம் கூடிய பொருட்செலவு ஏற்படும், பிரயாணங்கள் கூடுதலாயிருக்கும், சனிக்கிழமை பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

## எண் 6

இவர்களுக்கு இந்த வாரம் பூமி சம்பந்தமான சந்தோஷம் ஏற்படலாம், உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க நல்லாதரவு கிடைக்கும், காதலர்களில் சிலருக்கு அந்தஸ்துக்கு மீறிய நல்ல துணை கிடைக்கக்கூடும், சிலருக்கு விஷபயம் ஏற்படலாம, வயதுவந்தவர்கள் விண்விவகாரங்களில் ஈடுபாடுகள் ஏற்படக்கூடும், மனக்கட்டுப்பாடுடன் நடந்து கொள்ளுதல் உத்தமம்.

## எண் 7

இவர்களுக்கு இந்த வாரம் குடும்ப வாழ்க்கையில் ஏதாவது குறையிருக்கும் எனினும் தனதானிய லாபம்-வியாபார முன்னேற்றம் - பொருள் வரவு-காதலர்களுக்குச் சந்தோஷம் உண்டு. 20 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்டவர்களுக்கு அனேகமாக சந்தோஷமான மனநிலை உண்டு குடும்பநிலை உயர்ந்தவர்களுக்கு வாழ்க்கையில் பிறரால் கஷ்டம்-உடல் நலக்குறைவு-பின்னை ஒன்றின் உடல்நலக் குறை இவையுண்டாகும். வெள்ளிக்கிழமைஉடல்நிலையில் கவனம் எடுத்தல்வேண்டும்.

## எண் 8

இவர்களுக்கு இந்தவாரம் உணர்ச்சிவசப்படக்கூடிய நிலை ஏற்படலாம். சிலர் கொண்ட கொள்கையைக் காற்றில்பறக்க விடக்கூடும், யோசனை கூடுதலாக இருக்கும், பிரயாசையும் கூடுதலாயிருக்கும், உடல்நலம் பாதிப்படையலாம். குடும்பத்தில் அன்பும் அமைதியும் நிலவும், அரசியல்வாதிகளுக்குத் தடுமாற்றமான நிலை தோன்றலாம், சனிக்கிழமை மிகவும் முன்யோசனையுடன் அவதானமும் வேண்டும்.

## எண் 9

இவர்களுக்கு இந்தவாரம் நினைத்திராத அளவு முன்னேற்றம் காணப்படுகிறது சத்திரசிகிச்சைக்காக இருந்த நோயாளிகூட சத்திரசிகிச்சை இன்றிக்குணமடையக்கூடும். பிள்ளை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும். நீண்டநாள் நோய்பிணிகளும் தீரக்கூடும். புதிய நண்பர்கள் மூலம் பெரும் செல்வாக்கும் கிட்டும். வீட்டில் சுபகாரியங்கள் நடைபெற இடமுண்டு. சனிக்கிழமையைச் சுபகாரியங்களுக்குத் தவிர்த்துக்கொள்ளவும்.

'வரசி'

சி. அ. செல்வத்துரை'
கூளாவடி,
ஆனைக்கோட்டை.

## குழந்தைகள் தினம்

1946ம் ஆண்டு நவம்பர் 14ம் திகதி (நேரு இந்தியாவின் இடைக்காலப்பிரதமராக இருந்தசமயம்) காந்தியடிகளிடம் ஆசிபெற, புதுடில்லியில் அவர் தங்கியிருந்த பங்கி காலனிக்கு வந்தார் காந்திஜி ஏதோ அலுவலாக இருந்ததால் காலனி குழந்தைகளுடன் நேரு விளையாட ஆரம்பித்துவிட்டார் அப்போது கவிக்குயில் சரோஜினி நாயுடு அங்கு வந்தார் காந்திஜியும்இதற்குள் அங்கு வந்து சேர்ந்தார்.

சரோஜினிதேவி காந்திஜியைப் பார்த்து"நேருபிறந்த நாளை நாம் ஏன் குழந்தைகள் தினமாகக் கொண்டாடக் கூடாது?' என்று கேட்டார் 'ஆம் நேரு குழந்தை உள்ளம் கொண்டவர். இது மிகப் பொருத்தமான யோசனை" என்று அண்ணலும் ஆமோதித்தார்.


நிம்மதி...
மாதாமாதம்
உங்களுக்கு வருவாய்
கிடைப்பது திண்ணம்



பலவருடங்களுக்கு உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் க்ஷேமமாக மாதாமாதம்
உங்கள் வருமானத்தை சீர்படுத்தக்கூடிய உத்தரவாதத்துடன் அளிக்கும் அரியதோர் திட்டம்.

பொன்னான வாழ்விற்கு நிறவுகோலான திட்டம்
உங்கள் வருங்காலத்தை ஒளிமயமானதாக்கி இருபத்தைந்து வருடங்களுக்கு
மாதாமாதம் மேலதிக வருமானத்தை அளிப்பதற்கு உத்தரவாதம் அளிக்கிறது.

எதிர்காலத்தை ஸ்திரமாக ஆரம்பிக்க ரூபா 100 - போதுமானது.

பொன்னான வாழ்விற்கு நிறவுகோலான திட்டத்தில் பல தரப்பட்ட திட்டங்கள் உள்ளன.
அவற்றில் ஒன்றை நேரில் வந்து தெரிவு செய்யுங்கள்.
எதிர்காலத்தை ஸ்திரமாக்கும் உத்தரவாதமான திட்டம்.

பொன்னான வாழ்விற்கு வழிவகுக்கும் திட்டம்
பற்றிய முழு விபரமும் அறிய
இக் கூப்பனை எமக்கு அனுப்புங்கள்.

த பிறின்ஸ் கொம்பனி லிமிட்டட்
தொலைபேசி: 23861-2

பெயர்: ______
விலாசம்: ______
தொலைபேசி: ______

த பிறின்ஸ் கொம்பனி லிமிட்டட்
தொலைபேசி: 23861-2

கிளைகள்:
தொலைபேசி: 7600
தொலைபேசி: 391
தொலைபேசி: 2533

CEYLINCO ADS



# அரங்கும் அவையும்

## 'கோவலன் கரப்புக் கூத்து'

யாழ்-மாநகராட்சி மன்றம், யாழ்-பிரெஞ்சு நட்புறவுக்கழகத்தின் ஆதரவில், கடந்த பௌர்ணமிக் கலை நிகழ்ச்சியாக, முள்ளியவளை கலைத்தாய் மன்றத்தின் 'கோவலன் கரப்புக்கூத்தை' திறந்த வெளியரங்கில் மேடையேற்றுவித்தது. நாட்டுக்கூத்துக்கள் நவீனமயப்படுத்தப்பட்டு நாசிப்புறங்களில் காண்பிக்கப்படும் இவ்வேளை, மூலவடிவம் சிதைவுறாத விதத்தில், அதாவது வட்டக்களரியில் சுற்றிச் சுற்றி ஆடப்படும் கூத்தினை மேடையிலே சிறப்புடன் நடாத்திரசிகர்களதுபாராட்டைப் பெற்றது. முள்ளியவளை கலைத்தாய் நாடகமன்றம், பரம்பரை பரம்பரையாக முல்லைத்திவுப் பகுதியில் ஆடப்பட்டுவந்த இக் கூத்தினை 12வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் தாளக்கட்டிலோ, நடிப்பிலோ, பாடலிலோ சோடைபோகாத விதத்தில் நடித்துள்ளனர். மிகவும் பாரமான நீண்டமுடி, கரப்பு உடுப்பு இவற்றை அணிந்து கின்றனர்.

## இறுதியாத்திரையும் இரங்கலுரைகளும்

காலஞ்சென்ற கலைஞர் 'சாணு'வின் ஈமக்கடனிலும், இறுதியாத்திரையிலும் ஏராளமான கலைஞர்கள், அறிஞர்கள், கலா இரசிகர்கள் பங்குகொண்டனர். இரங்கலுரையில் வானொலி தமிழ் நாடகப்பகுதிபொறுப்பதிகாரி கே. எம். வாசகர், இரா பத்மநாதன், திரு. கி. சண்முகம், திருமதி இராஜேஸ்வரி சண்முகம், கலைஞர் பேரம்பலம், 'சக்கடத்தார்' இராஜரட்ணம், நடிகமணி வி. வி. வைரமுத்து, திரு. தியாகராஜா, ஏ. ரீ பொ. உட்பட பலர் பேசினர். 'அரிய ஒருகலைப்பொக்கிஷத்தை, மாணிக்கத்தை மண்ணில் புதைக்கிறோமே' என நடிகமணி பேசியபோது கண்கள் கலங்கின.

## 'கருங்குன்றத்துக் கொலை'

கடந்த 11-5-79 இளவாலை புனிதஹென்றியார் கல்லூரி வர்த்தக மாணவர்களால் 'கருங்குன்றத்து கொலை' என்றநாட்டுக்கூத்து நடிக்கப்பட்டது. கூத்தில் ஆட்டம், ...

## கவிப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

ஆடுதல் சிரமமான தெனிலும், ஒரு சிலர் தவிர ஏனையோர் சுருதி தவறாது பாடி இரசிகர்களை ஈர்க்கும் வகையில் ஆடினர். பாண்டியன் (எம் வி. மூர்த்தி), மந்திரி (க துரைராசா) கோப்பெருந்தேவி (க. நவரத்தினம்), தட்டான் (ந. அமிர்தலிங்கம்) என்பவர்கள் நடிப்பில் தனிச்சிறப்பிருந்தது. இதன் தயாரிப்பாளர் திரு. என். சிவசுப்பிரமணியம் மன்றத்தலைவர் திரு. சு மகாதேவகுலசிங்கம், அண்ணாவியார் திரு க. வேலுப்பிள்ளை என்போரது கலைத்துவம் இக்கூத்தில் இழையோடி நிற்கிறது. கலைவளர யாழ். மாநகராட்சி மன்று எடுக்கும்முயற்சிகள் வெற்றிநடையிடட்டும்.

## ஒலிபெருக்கியும் கூக்குரலும்

மேற்படி நாடகத்துக்கு அமைக்கப்பட்ட ஒலிபெருக்கியின் குறைபாட்டாலோ என்னவோ பார்வையாளர்கள் அதிகபயனடைய சிரமமிருந்தது. சிறப்பு நிகழ்ச்சிகள் நடாத்தும்போது ஒலி, ஒளி விடயத்தில் நடாத்துவிப்பவர்கள் முக்கிய கவனம் எடுத்தே யாக வேண்டும். இல்லையெனில் சுவைஞர்கள் ஏமாற்றத்துக்குள்ளாகலாம். பார்வையாளர்களில் சிலர் பண்பின்றி அவையில் கூக்குரலிடுவதும் நமது குறைபாடே. எமது பாரம்பரிய கலைகளைப்பார்க்கும்போதாவது அவற்றிற்கு மதிப்புக்கொடுத்து, பொறுமையோடு சுவைக்க முனையவேண்டும். நாகரிகம்போல் சிலருக்குத் தோற்றும் பழைய கலைவடிவங்கள் பல அரிய விடயங்களை உள்ளடக்கியவையாய் இருக்கலாம். கூக்குரலிடுவது அவைப்பண்புக்கு ஒவ்வாதது. மற்றச்சமூகத்தினர் தமது பழமையை பாரம்பரியத்தை பெருமதிப்புக் கொடுத்து வளர்ப்பதாலேயே அவர்கள் கலைத்துறையில் துரிதவளர்ச்சி அடை துள்ளன என்பன அதிகமிடம் பெறவேண்டும். இந்நாடகத்தில் ஆட்டங்கள் குறைவாகவே இருந்தன. அரங்கமைப்புஒழுங்கின்றி அமைந்த தால்கூத்தின் ஓட்டத்திலும் தொய்வு விழுந்தது. ஒலிபெருக்கியின் பிழையோ அன்றி நடித்தவர்கள் குரல் வளக்குறைவோ பாடல்கள் வசனங்கள் தெளிவாகக் கேட்கவில்லை. நாடகக்கதை ஓட்டத்தை மேலாவாரியாக விளங்குவதிலேயே கஷ்டமிருந்தது. ஐந்து ஆறு பக்களிரிடமும், இருடர்தலைவரை நடித்தவரிடமும் ஆடவும் பாடவும் கூடிய ஆற்றல்கள் இருப்பது தெரிந்தன. அண்ணாவியார் திரு. யோசெப்பு ஆரம்பஉரையில் 'அநுபவமற்ற மாணவர்கள் நடிப்பதால் பெருங்குறைகள் இருக்கலாம்; மன்னியுங்கள்' என்று கூறியதிலும் பொருளில்லாமல் இல்லை. அவையினர் அடக்கப் பண்புடன் மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் நோக்கில் ரசித்தனர். பண்புள்ள பழக்கப்பட்ட பார்வையாளர்கள் என்பதை சுட்டியது. கூடிய பயிற்சியின்பின் மேடையிடப்பட்டிருக்குமானால் முன்னர் புனிதஹென்றியார் கல்லூரி அரங்கேற்றிய வெற்றி நாடகங்களின் தரத்தைஎட்டிப் பிடித்திருக்கும்.

## மேடை நடை

மேடைக்குநடைஅவசியம். நாட்டுக்கூத்துக்களில் நடைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள். அந்தநடைகளில் நாடகத்தன்மை அடங்கியிருந்தது இராஜநடை, நன்மந்திரியின் நடை என்பன வெவ்வேறு உள்ளங்களைக் காட்டிநின்றன. பெண்வேடம் தாங்கி ஆண்கள் நடிக்கும்போது அவர்கள் நடையே தனித்துவமாய் விளங்கின. நெல்லியடி கிருஷ்ண ஆழ்வார், மெய்கண்டான் சரவணமுத்து. எம் ரி. பெனடிக் ஆகியோர் பெண்களாகவே மக்களுக்குத் தோன்றினர் எனலாம்

## நூல் விமர்சனம்

நூல்: இணையும் இரண்டு துருவங்கள். வெளியீடு: இளம் எழுத்தாளர் ஒன்றியம், 234/7, மானிப்பாய்வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

இளம் எழுத்தாளர்கள் கணபதி கணேசன், ஆயிலியன் ஆகியோரது ஏழு சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுப்பு நூல் ஒன்றை இளம் எழுத்தாளர் ஒன்றியம் இரண்டாவது வெளியீடாக வெளியிட்டுள்ளது.

கணபதி கணேசனின் நான்கு சிறுகதைகளும் ஒவ்வொரு பிரச்னையை வெவ்வேறு பார்வையில் அணுகுகின்றன. 'பரீட்சை மாணவர்க்கல்ல சமூகத்துக்கு' என்ற முதலாவது கதையிலேயே தரப்படுத்தலுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்துகிறார். பிரச்னையை நல்ல முறையில் அணுகியபோதும் பாதிப்படைந்த மாணவன் எதுவும் செய்யத் தயாராகிவிட்டதாகமுடித்தது பிரச்னைத் தொடர்ந்து வளர்ப்பதாகவே அமைகிறது.

'தன்முதலாளிக்கு பெண்களை விலைபேசும தரகன் தனது மகளையே விற்கும் நிலையை 'சமுகத்தின் எதிரொலி'யில் அழகாக எடுத்துக்காட்டுகிறார். சுயநலத்துக்காக தனது சமூகத்தையே அழிவுப்பாதையில் செலுத்திக்கொண்டிருக்கும் ஒரு சில சுயநலவாதிகளை கல்வி அதிகாரி மூலம் அம்பலப்படுத்தியதுடன் ஆசிரியர் சண்முகநாதன் மூலம் அவரின் மனதையே மாற்றிவிடுவது அழகாக எடுத்துக்காட்டப்படுகிறது. 'இணையும் இரண்டு துருவங்கள்' என்ற இந்தக்கதை நூலில் உள்ளவற்றில் வாசகர் மனதில் இடம்பிடித்த கதை.

'இப்படியும் ஒரு பெண்' வெறும் காதல் உறவுகளைமட்டும வெளிப்படுத்துகிறது. அறிமுக எழுத்தாளர் ஆயிலியனின் மூன்று சிறுகதைகள் தொகுப்பில் உள்ளன. 'நோயாளிகள் மருந்து சாப்பிடுவதில்லை' என்ற கதை ஆயிலியனின் திறமைக்கு பட்டயம் வைக்கிறது. தனது அப்பாவைப்போலவே காலைநொண்டிக்கொண்டிருந்த பக்கத்து வீட்டுக்காரர் இப்போது நடக்கும்போது அப்பாமட்டும் ஏன் நடக்கிறாரில்லை என்று சிறுவன்மூலம் கேட்டகேள்வி வாசகர் உள்ளத்தில் பதிந்துவிட்ட ஒன்று.

'ஒரு விடிவு காத்திருக்கிறது' சாதிவேற்றுமைபற்றி எழுதியவர் கலப்புத்திருமணத்துடன் முடிப்பது கலப்புத்திருமணத்தால் சாதி வேற்றுமை மறைந்துவிடும் என்பதுபோலிருக்கின்றது. இவ்வாறுயின் முப்பது வருடங்களுக்கு முன்னரே அதுமறைந்திருக்கவேண்டுமே.

எழுத்தின் துணைகொண்டு சமுதாயத்தின் சீர்கேட்டினை புரியவைக்கிறேன் என்றவர் புரியவைப்பதுடன் நிற்கக்கூடாது.

இப்போது வெளியீட்டுவிழாவுக்கு நாளைவைத்துவிட்டு புத்தகத்தை அவசரஅவசரமாக அச்சடிப்பதால் அநேக எழுத்துப் பிழைகள் ஏற்படுகின்றன. இந்நூலிலும் அவற்றுக்குக் குறைவில்லை. நூலின் அட்டையும் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம்.

-எஸ். குகநாதன்

## வழுவில்லா வாழ்வு

எழில் நிறை தமிழர் வாழ்வின்
இல்லறம் காணில்
அழகனும் தலைவன் கொண்ட
அகம் நிறை மங்கை யோடு
வழுவிலா வாழ்வைக் கொண்டு
வளம்பல பெற்ற இன்ப
தலைவனும் தலைவி காட்டும்
தனியறம் இனிதாமன்றே.

இலக்கியம் கதையாய் சொல்லும்
இன்தமிழ் வாழ்வை செஞ்சுவைக்
கலக்கியே படித்தோம், இன்பக்
கவிதையாய் சுவைத்தும் உண்டோம்
விளக்கென ஜொலித்த இந்த
விரும்பிடும் வாழ்வை யின்று
துலக்கிட வேண்டாமோ நாம்
துணிந்திடில் இனிதாமன்றே

கன்னியர் நெஞ்சம் தூய்மைக்
களம்; அதித் புகுந்த காளை
மன்னவர் ஏத்த இன்ப
மனையறம் காக்கவேண்டும்
கன்னியோ காளையோ தம்
கருத்தொரு மித்த வாழ்வை
கண்ணெனப் போற்ற; வாழ்வு
கனிவ் பெறில் இனிதே யன்றோ

ஒருத்தனுக் கொருத்தி யிந்த
உண்மையை நெஞ்சில் போற்றும்
ஒருத்திக்கே ஒருத்தன் இந்த
உறவு மாறாத வண்ணம்
விருப்புடன் வாழும் மாந்தர்
விண்ணவர் ஏத்த வாழும்
திறத்தினைப் பெற்றா ரன்றி
தெய்வமு மாவா ரன்றோ.

--செல்வி அ. திவ்வியபூரணம்

## கண்ணாடியில் பாருங்கள் ஒரு முட்டாளைக் காணலாம்!

கண்ணாடிக்குமுன் நின்று முகம் பார்க்கும் பழக்கம் உங்களுக்கு இல்லையா? நல்லதாய்ப் போச்சு. ஒரு முட்டாளைத் தரிசிக்கும் துர்ப்பாக்கியம் உங்களுக்கு ஏற்படமாட்டாது.

இப்படி எழுதியுள்ளார் ஆங்கில எழுத்தாளர் ஒருவர்.

ஏப்ரல் முதலாம் திகதியை முட்டாள்கள் தினம் என்று கூறுவதுண்டு. அன்று ஒருவரை ஒருவர் முட்டாளாக்கி மகிழ்வது மேல்நாட்டில் ஒரு பழக்கம் அது இங்கேயும் தொற்றிக்கொண்டுவிட்டது.

அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளரான மார்க்ட் வெயின் ஏப்ரல் முட்டாள் தினம் பற்றி குறிப்பிடும்போது ஏனைய 364 நாட்களிலும் நாம் என்னமாதிரி இருக்கப்போகிறோம் என்பதை நினைவுபடுத்தும் ஒரே தினம் தான் ஏப்ரல் முதலாம் திகதி என்று கூறினார்.

### முட்டாள்களுக்கு பாராட்டு

முட்டாள்களைப் பெருமையாகப் பேசியவர்களுமுண்டு.

மூடநம்பிக்கையைப் பொறுத்தவரை அறிவாளிகளெல்லாம் முட்டாள்களையே பின் தொடர நேர்கிறது என்கிறார் பிரான்சின் பேக்கன்

ஒரு முட்டாளால் கிணற்றுக்குள் வீசப்படும் கல் ஒன்றை நூறு அறிஞர்கள் கூடினாலும் கண்டுபிடிக்கமுடியாமல் போகலாமென்கிறார் ஜோர்ஜ் ஹேர்பர்ட் என்பவர்.

### சில சமயம் எல்லாருமே

'எல்லா மனிதர்களும் சில சமயம் முட்டாளாகிவிடலாம். ஆனால் எல்லா நேரமும் எல்லாரும் அப்படியாவதில்லை' என்பது அரபிய பழமொழியொன்று.

### ஆசிரியரும் மாணவனும்

ஒரு மாணவன் தன் ஆசிரியரிடம் சிக்கலான பலகேள்விகளைக் கேட்டு மடக்கிக்கொண்டிருந்தான், அவனுக்குநல்லஅடி கொடுக்கவேண்டுமென்பதற்காக ஆசிரியர் கூறினார் 'ஓர் அறிவாளியால் பல ஆண்டு காலம் பதில் சொல்லக்கூடியதான பலகேள்விகளை ஒருமுட்டாளினால் ஒரு மணி நேரத்தில் கேட்டுவிட முடியும் என்பதை நீ அறிவாயா? என்று.

'இப்பொழுது தெரிகிறது தான் ஏன் சோதனையில் தோல்வி கண்டேன் என்பது' என்றான் மாணவன்.

●

'பாதையில் நீர் நடந்து போகையில் முதலாவது சந்திக்கும் நபர் ஒரு முட்டாளாகத்தான் இருப்பான். சந்தேகமாயிருந்தால் அவனிடமே கேட்டுப்பாருங்கள். அவன் அதை நிரூபிப்பான்.'

இப்படிக் கூறியவர் அமெரிக்கப்பத்திரிகையாளர் ஒருவர்.

### கிரேக்க அறிஞர்

'அறிவாளிகள் ஏதும் கூற வேண்டியிருந்தால் மாத்திரமே பேசுவார்கள். முட்டாள்களோ வெளில் பேசவேண்டுமே என்பதற்காகப் பேசிக்கொண்டிருப்பார்கள்' என்றார் கிரேக்க அறிஞர் பிளாட்டோ.

(7-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

போன்: 7199, தந்தி: வைரம்.

நாகம்ஸ் [கன்னாகம்]
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஒருதாய் மக்கள்

Rio (Jaffna) Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

21-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன்: 469
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
ஈஸ்மன் கலர் புதிய பிரதி

ஜனத்திரள் அலைமோதும்
2-வது வெற்றி வாரம்
சாந்தி (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
— இப்பொழுது காண்பிக்கப்படுகிறது —
இராஜேந்திர குமார் — இரட்டைவேடம் —
ஹேமமாலினி—பானுரேகா—மற்றும் பலர்
இசை: லக்ஷ்மிகாந்த் பியரேலால்
இனிய இசை, குதிரை ஓட்டங்கள், விறுவிறுப்பு மிகு சண்டைகள்.
லட்சக்கணக்கான ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு.
"கோரா அவுர் காலா"
ஹிந்தி ஈஸ்ட்மன் வண்ணத் திரைஓவியம்.

REGAL (Jaffna) Daily 4-30, 7-00 & 9-30 p.m. onl.
PERCY S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-15, 9-30
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 3-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு: 10-30, 2-30, 6-30 & 9.45
ஜெமினி—பத்மினி
வீ ரா ங் க னை (புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7/9 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
வியட்நாம் வீடு

தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்நகர்)
காந்தராவ் - மாலினி வரலக்ஷ்மி நடித்த
ஜெ ய் ப வா னி
(புதிய பிரதி)
22-5-79 முதல்
கோமாதா என் குலமாதா

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஃ டொன் பொஸ்கோ ஃ காஞ்சனா
ஃ செல்வசேகரன் ஃ ஜவாகர்
ஃ ஜெயதேவி ஃ ஏகாம்பரம்
ஃ மணிமேகலை ஃ தர்மலிங்கம்
இன்னும் பலர் திறம்பட நடித்த
எங்களில் ஒருவன்


# 'அமிர் செய்த பணியை தொடர்ந்து செய்வோம்'

## அமெரிக்கா செல்லுமுன் சிவா விடுத்த செய்தி

(கொழும்பு)

"தமது வெளிநாட்டுப் பயணத்தின்போது திரு அமிர்தலிங்கம் இலங்கைத் தமிழ்மக்களின் இன்னல் குறித்தும் அவர்களது தமிழீழக் கோரிக்கை குறித்தும் வெளியுலக மக்களுக்கு எடுத்து விளக்கிய பெரும் பணியினைத் தொடர்ந்து செய்வதற்காக எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்துவேன். இதுவே எனது விஜயத்தின் நோக்கமாகும்."

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் நேற்று அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன் இவ்வாறு நமது நிருபரிடம் கூறினார்.

அமெரிக்காவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள "ஈழத்தமிழர்களின் எதிர்காலம்" பற்றிய கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா செல்லுவதற்குமுன் ஈழநாடு வாசகர்களுக்கு விசேட செய்தியொன்றை திரு. எம். சிவசிதம்பரம் விடுத்தார்.

நேற்று நண்பகல் ஒருமணியளவில் திரு. எம். சிவசிதம்பரமும் திரு நீலன் திருச்செல்வமும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா பயணமானார்கள். இவர்கள் ஒருமாத காலம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்வார்கள்.

திரு. எம். சிவசிதம்பரம் தமது செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கத் தமிழ் நண்பர்களின் ஒழுங்கு செய்துள்ள 'ஈழத் தமிழ் மக்களின் எதிர்காலம்' பற்றிய கருத்தரங்கில் தமிழ் நண்பர்கள் மட்டுமல்ல அமெரிக்காவிலுள்ள பல்துறை அறிஞர்கள், [illegible], அரசியல் தலைவர்கள் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள். இலங்கைத் தமிழ்மக்களின் சார்பில் நானும், திரு. நீலன் திருச்செல்வமும் எமது நிலையை விளக்கவுள்ளோம். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்ற முடியாத முடிவாகிய தமிழீழ முடிவையும் விளக்குவோம்.

இதற்குப் பிறநாடுகளில் ஆதரவு தேடும் முயற்சியையும் ஏற்படுத்துவோம். உலகில் உள்ள எந்தவொரு நாடும் தனித்து வாழவில்லை. ஒவ்வொருவரும் ஒருவரைப் பரஸ்பரம் நன்குணர்ந்து நட்பை வளர்த்து நல்லெண்ணத்துடன் வாழ்கிறார்கள். இந்த அடிப்படையில் நான் எமது லட்சியத்தை அமெரிக்க மக்களும், அரசியல் தலைவர்களும் நன்கு உணரும்வகையில் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவோம். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இந்தப் பிரச்சினையை நன்குணர்ந்து நமது லட்சியத்தையடைய அவர்கள் செயல்பட இக்கருத்தரங்கு நல்ல உதவியாக இருக்குமென நம்புகிறேன்.

இவ்வேளையில் எமது தமிழ் மக்கள் ஒற்றுமையைச் சிதைக்காமல் சுதந்திரப் பாதையில் செல்லுமாறு பணிவாக வேண்டுகிறேன். அன்புடன் விடைபெறுகிறேன்.' (ம)

## சிறுகதை

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கேட்ட கேள்வி பொன்னுத்துரையின் காதுகளில் துல்லியமாக ஒலித்தது.

'மாவட்ட நீதிமன்றம்' என்ற அந்த எழுத்தைக் கவனமாகப் பார்த்துவிட்டு றோட்டில் இறங்கி நடந்தான்.

இரண்டு வாலிபர்கள் அவனுக்கு முன்னே ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி காரசாரமாக விவாதித்துக்கொண்டே நடந்தார்கள்.

அவர்களின் விவாதம் பொன்னுத்துரையின் காதில் விழுந்து ஏதோ ஒரு உண்மையை புரியவைக்க முயற்சிக்கிறது. அவன் வேகமாக நடந்தான்.

'லட்சுமி... நியாயங்களை செத்துப்போட்டுதடீ... இந்த வீட்டையும் காணியையும் விட்டு வெளியேறவேணுமாமேடீ... முடியுமா... முடியக் கூடிய காரியமா...? பாப்படீ... ஓ-! பாப்பம்...

எவன் எவனோ பாடிப்பாடிச் சொல்லியும் கேளாமல் 'இஞ்சை கொண்டுவந்து குடியேற்றுகிறது' நியாயம். காணிச்சொந்தக்காரன் எனக்குச் சொன்னபடி நான் குடியேறி இருக்கிறது நியாயமில்லை. அப்பிடித்தானேடீ-! எடியே... அவன் செய்யிறதைச் செய்யட்டும் நானும் சந்திக்கிறேனடீ...'

[யாவும் கற்பனை]

## கண்ணாடியில்...

[6ம பக்கத் தொடர்ச்சி]

'முட்டாள்கள் ஏன் தோல்வியடைகிறார்கள் என்றால் அவர்கள் இலகுவாக நினைப்பதெல்லாம் கஷ்டமாக இருப்பதுதான்' என்றார் சேர்ட்டன் கொலின்ஸ் என்பவர்.

'தன்னைத்தானே முட்டாளாக்கிக்கொண்டு உழைப்பவன் சகல விஷயங்களிலும் உறுதியாக முன்னேறிவருகிறான்' என்கிறார் பேட்ரம் ரஸல்ஸ்

'தேவாணங்களும் போகஞ்சும் இடங்களில் எல்லாம் முட்டாள்கள் துணிந்துநுழைந்து விடுகிறார்கள்' என்பது ஆங்கிலப் பழமொழி ஒன்று


வெஸ்லி (ஊர்காவற்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - ராதாசலூஜா
இதயக்கனி


## சுப்பிரமணியம் பூங்காவில் தொலைக்காட்சி சாதனம்

வெகுநாட்களுக்குப் பிறகு கடந்த வெள்ளியன்று யாழ் சுப்பிரமணியம் பூங்காவிற்குச் சென்றேன் என்றுமில்லாதவாறு ஓர் இடத்தில் மக்கள் கூட்டம் காணப்பட்டது சிறுவர்கள் இளைஞர்கள் வயதானவர்கள் ஏன் பெண்களும் கூட ஏராளமாகக்காணப்பட்டார்கள். நெருக்கியடித்துக் கொண்டு சென்று பார்த்தபோது உயரமான மேசையொன்றின்மீது தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வைத்து பூட்டிக்கொண்டிருந்தார்கள் சிலர் பக்கத்தில் 'ஆன்டனா' காட்சி ஈர்ப்பு சாதனம் நிறுவப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் ஞாபகம் வந்தது யாழ் மாநகரசபை ஆணையாளர் அன்று சுப்பிரமணியம் பூங்காவில் தொலைக்காட்சி ஒன்றை ஆரம்பித்துவைக்கப் போகும் சங்கதி

சற்றைக்கெல்லாம், விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் வந்துசேர்ந்தார். எல்லாருமே கைகடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர் ஆணையாளரும் அடிக்கடி கடிகாரத்தைப்பார்த்துக் கொண்டார். சரியாக ஆறரைமணிக்கு திரு. சிவஞானம் விசையை முடுக்கினார் "இளங்கலைஞர் அரங்கம்" என்ற அழகான தமிழ் எழுத்துக்கள் காட்சியளித்தன. தொடர்ந்து இளம் பெண்கள் இருவர் கர்நாடக இசையமுதம் வழங்குவதைக் காட்டினார்கள்.

நம் நாட்டில் தொலைக்காட்சிபரப்பும் நிலையம் இன்னமும் நாடுமுழுவதற்குமான சேவையை ஆரம்பிக்காது போனாலும், தமிழ்நாட்டிலிருந்து தொலைக்காட்சிகளை யாழ்ப்பாணத்தில் தெளிவாகப் பார்க்க முடிவது மகிழ்ச்சிக்குரியதுதான்

பொழுது போக்குக்காக மாலை நேரங்களில் யாழ் சுப்பிரமணியம் பூங்காவிற்குச் செல்லும் மக்கள் இந்த ஏற்பாட்டை பெரிதும் பாராட்டுவார்கள் என்பது திண்ணம். இந்தப்பாராட்டு விசேஷ ஆணையாளர் திரு சிவஞானத்தையும் அவரது சகஊழியர்களையுமே சாரும்.

இந்தத் தொலைக்காட்சிச் சாதனத்தை மாநகர சபையின் செலவில் 'விக்ரஸ்' ஸ்தாபனத்தார் அமைத்துக் கொடுத்துள்ளனராம், இன்னுமொரு சாதனத்தை 'விக்ரஸ' நிறுவனத்தினர் தம் சொந்த செலவில் பூங்காவின் சிறுவர் பகுதியில் அமைத்துக் கொடுக்கவிருப்பதாக 'யாழ்வாணன்' கூறுகிறார்.

விசேஷ ஆணையாளர் திரு. சிவஞானம் தமது டலவேலைகளுக்கு மத்தியில், யாழ் நகரைப் புதுப் பொலிவுடன் தோற்றமளிக்கச்செய்தவதற்கு தம்மால் இயன்றளவு முயற்சி எடுத்துள்ளார் என்பதை ஒருதடவை நகரைச் சுற்றிப்பார்த்தால் புரிந்து கொள்ளலாம்

யாழ் பொது நூலகத்தின் முன் சரஸ்வதிமாக உருவெடுத்து பின் யாழ். நங்கையாக உருமாறி, உடைத்து அடியோடு பெயர்க்கப்பட்டு எங்கோ ஒருமூலையில் சிதைந்து கிடந்த யாழ் நங்கை இப்பொழுது பூங்காவின் உள்ளே தெற்கு வாயிலுக்கருகிலுள்ள நீர்த்தொட்டியின் நடுவில் யாழ் ஏந்திய கையுடன் ஒயிலாக நிற்பது கண்களுக்கு குளிர்ச்சியாக இருக்கின்றது.

அழகு மிளிரும் இச்சிலையைப் பொருத்தமான இடத்தில் நிறுவி தமது கலையுணர்ச்சியை காட்டியிருக்கிறார் ஆணையாளர்.

பண்ணைச்சந்தியில் புதிதாக சுற்றுவளைவு ஒன்றையும் ஆணையாளர் திறந்துவைத்துள்ளார். இந்த இடத்தில் அது ஒருமுக்கிய தேவையாகும், பஸ்நிலையத்துக்கு அருகில் அலங்கார நீர்த்தொட்டி ஒன்றை ஆணையாளர் ஆலோசனையின் பேரில் 'சுபாஸ்' உரிமையாளர் நிறுவியுள்ளார்.

வின்சர் தியேட்டர் சந்தியில் தனியார் ஒருவரின் முயற்சியின் பேரில் இப்படியான சந்தி சுற்றுவளைவு ஒன்று நிறுவப்படவிருக்கிறதாம்.

பொதுமக்களும், வர்த்தகப் பெருமக்களும் இவ்வாறு ஆதரவு வழங்க முன்வந்தால் நகரை மேலும் அழகுபடுத்த முடியும் என்று விசேஷ ஆணையாளர் நம்புகிறார்.

நெடுந்தூரப் பிரயாணிகளுக்கான புதுமாதிரியான பண்டரிப்புநிலையம், இன்னை

[8ம் பக்கம் பார்க்க]

## திருமலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### விஸ்வநாதன்

யாழ் மாநகரசபையின் மேயராகத் தெரிவாகியுள்ள திரு ஆர் விஸ்வநாதன் கூட்டணியின் வெற்றி அறிவிக்கப் பட்டதும் அங்கு திரண்டு நின்ற மக்களின் முன்னிலையில் உரையாற்றுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணிதான் தமிழ் மக்களின் ஒரே அணி என்பதை மக்கள் அரசுக்கு உணர்த்திவிட்டனரென்ருர்.

### காலியில்

### தகநாயகா

காலிமாநகர சபைக்கு நடந்த தேர்தலில் பத்துப்பேர் ஐக்கியதேசியக்கட்சி உறுப்பினராகச் தெரிவுசெய்யப்பட்டு நிர்வாகத்தைக் கைப்பற்றியுள்ள போதிலும் டாக்டர் டபிள்யு தகநாயகா ஐந்து சுயேச்சைகளுடன் எதிர்க் கட்சிக்குத் தெரிவுசெய்யப் பட்டிருக்கிருர் [காலி நி]

## வானெலியில் இன்று அழகப்பன் பேட்டி

[யாழ்ப்பாணம்]

அண்ணமலைப் பல்கலைக்கழக துணைப்பேராசிரியர் டாக்டர் ஆறு அழகப்பனின் விசேட பேட்டி ஒன்று இன்று மாலை 6-15 மணிக்கு இலங்கை வானெலியின் தமிழ்சேவையில் ஒலிபரப்பப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் அழகப்பன் இன்று காலை 10 மணிக்கு நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்வதோடுமாலை6 மணிக்கு பருத்தித்துறை சாரதா சேவா மன்றத்திலும் உரையாற்றுவார். (இ)

## சுப்பிரமணியம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் பூர்த்தியாகாமலிருக்கும் கிளிபிக போன்ற முயற்சிகளும் நகரை அழகுபடுத்தும் விசேஷ ஆணையாளரின் முயற்சிகளில் சிலவாகும்.

காவியாகக் கிடந்த மாநகர கஜானுவில் ஏறத்தாழ 60 லட்சம் ரூபாவை சேர்த்து வைத்திருப்பது விசேஷ ஆணையாளரின் நிர்வாகத் திறமைக்கு ஒரு சான்ருகக் கூறலாம். அந்தப் பணம் புதிதாக அமையப் போகும் மாநகரசபையின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பெரிதும் பயன்படும் என்கலாம்.

'பேறு'

### தேவை

கல்லு அரைக்கும் [Metal Crusher] மெஷின். முழுவிபரங்களை எழுதவும். T ஜெறோம், கடுதாசு கை ஒழுங்கை, இளவாலை. 2491

## வவனியா [நகரசபை]

ஸ்தானங்கள்-11

| | |
|---|---|
| மொத்த வாக்காளர் | 8,025 |
| வாக்களித்தோர் தொகை | 6,037 |

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| த. வி. கூட்டணி | 4,074 | 08 |
| ஐ. தே. க. | 1,668 | 03 |
| கம்யூ. கட்சி | 114 | 00 |
| சுயேச்சை குழு | 181 | 00 |

புதிய உறுப்பினர்கள்: தமிழர் விடுதலைக் கூட்டணி

ஐயாத்துரை கேதீஸ்வரன் (தலைவர்), முருகேசு சிற்றம்பலம் (உபதலைவர்) வேதநாயகம் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம், அருமைத்துரை அருளானந்தம் சிங்கராயர், செல்லத்துரை சில்வெஸ்ரர்செபஸ்தியாம்பிள்ளை, கந்தப்பு நாகேந்திரன் பத்மநாதன், சோமசுந்தரம் சரவணபவானந்தன், கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்.

ஐக்கியதேசியக் கட்சி

செல்லையா மனோகரன். பெரியதம்பி அருள்பிரகாசம் ஹமீது முஹம்மது கவுஸ்.

## திருக்கோணமலை [நகரசபை]

ஸ்தானங்கள்-12

வாக்களித்தோர் தொகை 15,981

| கட்சிகள் | வாக்குகள் | ஸ்தானங்கள் |
|---|---|---|
| த. வி. கூட்டணி | 9898 | 9 |
| ஐ. தே. க. | 3974 | 3 |
| சுயேச்சை குழு-1 | 785 | 0 |
| சுயேச்சை குழு 2 | 1234 | 0 |

புதிய உறுப்பினர்கள் தமிழர்விடுதலைக் கூட்டணி

வெற்றிவேலு வேலுப்பிள்ளை(தலைவர்) திருமதி சரஸ்வதி சுவாமிநாத பிள்ளை சிவானந்தபிள்ளை (உபதலைவர்) தாமோதரம்பிள்ளை பிரான்சிஸ் சுப்பிரமணியம், ரெங்கசாமி நவரெத்தினம், மு. சாஹூல் ஹமீது, நடராசா துரைராசா, செபஸ்தியாம்பிள்ளை பட்றிக்,வேலாயுதம் தணிகாசலம், செல்லத்துரை கருணனந்தசாமி.

ஐக்கிய தேசியக் கட்சி:

உமாலெப்பை முகம்மதுஇஸ்மயில், விமலதாச விஜயரத்தின, த மாணிக்கவாசகர்.

### பண்டாரவளை

(நகரசபை-7)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 1,228 | 6 |
| சு க | 420 | 1 |

டி எம் டபிள்யூ பெரேரா [தலைவர்], எஸ் எம் முத்தையா [உப தலைவர்], கே சி துரைராஜாவும் தெரிவானர்.

### அப்புத்தளை

(நகரசபை-7)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 558 | 05 |
| சு க | 463 | 02 |

ஆர்தர் சிறிசேன [தலைவர்]

### குளியாப்பிட்டி

(நகரசபை-9)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 1,325 | 06 |
| சு க | 748 | 03 |
| கம்யூ | 134 | — |

எச் எம் தயானந்த ஹேரத் [தலைவர்]

### கேகாலை

(நகரசபை-11)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 3,274 | 7 |
| சு க | 2,139 | 4 |
| ல ச ச | 320 | — |

ஒ எப் விக்கிரமசிங்க [தலைவர்]

### பதுளை

(மாநகரசபை-15)

| கட்சி | வாக்குகள் | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 7,625 | 11 |
| சு. க. | 3,305 | 04 |
| ல ச ச. | 1,040 | — |

ரி டபிள்யூ. டி. சில்வா தலைவரானர் திரு. அருணசலம் தட்சணமூர்த்தியும் ஓர் இறுப்பினரானர்.

### தலவாக்கொல்லை லிண்டுவ

(நகரசபை-7)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே. க. | 1,188 | 6 |
| சு. க. | 427 | 1 |
| கம்யூ. | 174 | — |

பீ. ஹேமச்சந்திர (தலைவர்) பெரியசாமி சந்திரசேகரனும் தெரிவானர்.

### மாத்தறை

(நகரசபை-11)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 8 518 | 7 |
| கம்யூ. | 4,315 | 3 |
| சு க. | 2,450 | 1 |
| சுயேச்சை | 497 | — |

எஸ். விஜயகுணவர்த்தன [தலைவர்]

# வாக்குச் சாவடிக்கு வந்த அமைச்சருக்கு ஆட்சேபம்

## மகனைக் காணவில்லையென தந்தை புகார்

[திருமலை]

திருமலைநகரசபைத் தேர்தல் வாக்குச்சாவடி ஒன்றுக்கு திருமலை மாவட்ட அமைச்சர் திரு. நெல்சன் விஜயம்செய்ததை தமிழர் விடுதலைக்கூட்டணியின் வாக்குச்சாவடி 'ஏஜண்ட்' ஆட்சேபித்ததை அடுத்து அவர் வெளியேறினர்.

இதையடுத்து திரு. நெல்சன் இங்கிருந்த இளைஞர் ஒருவரை தமது ஜீப்பில் ஏற்றிச் சென்றதாகவும் அந்த இளைஞரை அதன் பின்னர் காணவில்லை என்று அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டது.

### ஜனுதிபதிக்கு புகார்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட இளைஞரின் தந்தை. தமது மகன் கடத்தப் பட்டுள்ளதாகவும் மகனைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கும்மாறும் ஜனுதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவுக்கும் பொலிஸ் மாஅதிபர் திரு. அன செனவிரத்னவுக்கும் புகார் செய்துள்ளார். [ம-இ]

### இரத்தினபுரி

(நகரசபை-15)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 6,339 | 8 |
| கம்யூ | 3,982 | 4 |
| சு க | 3,156 | 3 |

எம் ஏ குணதிலக [தலைவர்]

### மாத்தளை

(மாநகரசபை-13)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 7,294 | 11 |
| சு க | 1,746 | 02 |
| சுயேச்சை | 1,163 | — |
| கம்யூ | 486 | — |

முகமட் தாஹிர் ஹுசேன் [மேயர்], வை பி எம் எம் யாப்பா [உதவிமேயர்], கோவிந்தன் கனகரத்தினமும் உறுப்பினரானர்.

### கடுகண்ணுவ

(நகரசபை-6)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே.க. | 704 | 5 |
| சு. க. | 153 | 1 |
| சுயேச்சை | 60 | — |

ஆர். அபயசுந்தர (தலைவர்)

### வத்தேகம

(நகரசபை-9)

| கட்சி | வாக்கு | ஸ்தானம் |
|---|---|---|
| ஐ தே க | 1,507 | 6 |
| சு க | 571 | 2 |
| சுயே | 390 | 1 |
| கம்யூ | 248 | — |

ரி விஜயரத்ன [தலைவர்] திருவேங்கடம்பிள்ளை என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் இரத்தினமும் உறுப்பினரானர்


## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் செல்லத்துரை

அளவெட்டியைச் சேர்ந்தவரும் ஓய்வுபெற்ற பரமேஸ்வராக் கல்லூரி ஆசிரியருமாகிய தில்லையம்பலம் செல்லத்துரை காலமானர். இவர் காந்திமதியின் அன்புக் கணவரும், புஷ்பகாந்தி, கமலாதேவி, விமலாதேவி, நித்தியானந்தன், இராசராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற கனகரத்தினம், காலஞ்சென்ற இராசரத்தினம், மயில்வாகனம் ஆகியோரின் சகோதரரும், சோதிலிங்கத்தின் மாமனரும். செந்தூரானின் பேரனுமாவார். இறுதிக் கிரியைகள் 1979 05-21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும். இல. 12, ஐயனர்கோவில் வீதி, வண்ணர்பண்ணை. 2505

## மரண அறிவித்தல்

### இ. பொன்னுத்துரை

கோண்டாவில் கொக்குவிலைச் சேர்ந்த இளைப்பாறிய யாழ். அரசினர் வைத்தியசாலை பிரதம ஓவசியர் திரு. இ. பொன்னுத்துரை காலமானர். இவர் அன்னலட்சுமியின் கணவரும், ஜெகதா, யோகநாதன் [நல்லூர் ப. நோ. கூ சங்கம்] மல்லிகாதேவி [புடவைக் கைத்தொழில் அமைச்சு கொழும்பு], சுலோசனுதேவி ஆகியோரின் தந்தையும், ஆறுமுகசாமி [இ போ சபை பருத்தித்துறை], செல்வராஜா [மலேரியா தடுப்பு இயக்கம் கொழும்பு] ஆகியோரின் மாமனுமாவார். அன்னரது ஈமக்கிரியைகள் இன்று [20-5-79] ஞாயிற்றுக்கிழமை மாலை 3-00 மணிக்கு கொக்குவிலில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 2506

## மரண அறிவித்தல்

### திருமதி, யோகராணி சிலுவைராசா

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி யோகராணி சிலுவைராசா காலமானர். இவர் சிலுவைராசா (சிலுவை) யின் அன்புமனைவியும், மெலாணி, ஜெராசாந்தன், குமார், லோகினியின் அன்புத்தாயாரும்; ஆவார் அன்னருடைய பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (20-5-79) மாலை 4 மணிக்கு 139, கடற்கரை வீதியில் இருந்து பரிசுத்த கொஞ்சோஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். 2504

## உங்கள் வீட்டுக்கு ஒரு T.V. (ரெலிவிஷன்) வேண்டாமா?

Nec, Philips, Tatung, National, Concord, Palavision இன்னும் பல.

அளவுகள்: 12 அங்குலம் தொடக்கம் 24 அங்குலம் வரை.

★ T. V. பூஸ்ரர் - ஏரியல்வயர்

★ T. V. ஏரியல் தயாரித்தல்-நிர்மாணித்தல்

★ T. V. பழுதுபார்த்தல்

★ T. V. உப உறுப்புக்கள்

இன்னும் T. V. சம்பந்தமான ஆலோசனைகளுக்கும்

V. K. இராசரத்தினம்

95, ஸ்ரான்லி ரோட் -- யாழ்ப்பாணம்.

போன்: 7447


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சின்னக்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945 & The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu Telephone 882.